IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | | 47/2017 |
| | | D/W's | | **DW1** |
| | | | | |
| NAME | M. மனோகரன் | CASTE | | |
| S/O | முத்துகருப்பன் (எ) பெரியான் | RELIGION | | **இந்து** |
| VILLAGE | அய்யங்கோட்டை | CALLING | | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | | 70 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28.08.2025**

**குறுக்கு விசாரணை**

1. எனது தகப்பனார் பெயர் முத்துக்கருப்பன் என்ற பெரிய சாம்பான் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு வேறு பெயர் கிடையாது என்றால் சரிதான். எனது உடன்பிறந்தவர்கள் மொத்தம் 5 பேர், அவர்கள் பெயர் மச்சம்மாள், மனோகரன், ராஜேந்திரன், ஆறுமுகம், முத்துலெட்சுமி. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது ஒருசொத்துதான், அதில் வீடு உள்ளது, அய்யங்கோட்டை கிராமத்தில் உள்ளது. அந்த வீட்டில் தற்போது எனது சகோதரர் ராஜேந்திரன் குடியிருந்து வருகிறார்.

2. அய்யங்கோட்டையில் எனது அப்பாவிற்கு வேறு வீடு இருந்து அதை ரோடு போடுவதற்காக அரசாங்க நில ஆர்ஜிதம் செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல, அது எனது மாமனார் வீடு. மேற்படி நில ஆர்ஜிதம் செய்த நிலத்தில் இருந்த வீடு எனது அப்பாவின் வீடுதான் என்றால் நிலம் கையகப்படுத்தியதற்கு கொடுக்கப்பட்ட இழப்பீடு தொகை நான் பெற்றுக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. அந்த வீட்டில் நான் குடியிருந்தேன். அந்த வீடு எந்த வருடம் இடிக்கப்பட்டது என்றால் எனக்குத்தெரியாது.

3. வழக்குச்சொத்தின் மொத்த சதுரடி எனக்குத்தெரியாது. வழக்குச்சொத்து சம்பந்தமாக எனது மற்ற சகோதர சகோதரிகள் ஆறுமுகத்திடம் எந்தவித பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு சொந்தமான அய்யங்கோட்டையில் உள்ள வீட்டைப்பொறுத்து ராஜேந்திரனிடம் நான் எந்த பிரச்சனையும் செய்யவில்லை. வழக்குச்சொத்திற்கு எனது அப்பா பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல, எனது பெயரில் தான் பட்டா உள்ளது, 2006 ல் பட்டா வாங்கினேன்.

4. எனது சகோதரர் ஆறுமுகம் வழக்குச்சொத்தில் கடந்த 6 வருடங்களாக குடியிருந்து வருகிறார், அவருக்குமுன் வழக்குச்சொத்தில் நான்தான் குடியிருந்தேன். வழக்குச்சொத்தில் நான் குடியிருந்தேன் என்பதைக்காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குச்சொத்திற்கு எனது அப்பாவின் வாரிசு என்ற முறையில் நான் பட்டா வாங்கவில்லை, எனது பெயரில் தனிப்பட்ட உரிமையில் பட்டா வாங்கினேன். வழக்குச்சொத்திற்கு 1982ல் எனது அப்பா பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

5. எனது அப்பாவிற்கு அய்யங்கோட்டையில் தற்போது ராஜேந்திரன் குடியிருக்கும் ஒரு வீடும், நான் குடியிருந்துவரும் வீடும், ஆறுமுகம் குடியிருக்கும் வீடும் சேர்த்து மூன்று சொத்துக்கள் என்றால் சரியல்ல. எங்கள் சகோதரருக்கும் பாகப்பிரிவினை ஏற்பட்டு மேற்படி சொத்துக்களை பிரித்துக்கொண்டோம் என்றாலும், நான் ஆறுமுகத்திடம் 1000 ரூபாய் பெற்றுக்கொண்டு பாகவிடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அந்த பாகவிடுதலைப்பத்திரம் என்றாலும் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றாலும் சரியல்ல, எனக்கு கையெழுத்து போடதெரியாது.

6. மேற்படி ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றாலும் தற்போது வயதாகி விட்டதால் கையெழுத்து போடமுடியாமல் கைரேகை மட்டும் வைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்குச்சொத்திற்கு 2006ல் பட்டா வாங்கவில்லை என்றாலும் 2016ல்தான் பட்டா பெற்றேன் என்றாலும் சரியல்ல. எனது பெயரில் உள்ள பி.வா.சா.ஆ.1 பட்டாவில் எனது அப்பா பெயர் " பெரியகருப்பன் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்குத்தெரியாது. நான் பொய்யான விவரங்கள் கொடுத்து போலியாக பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

7. வழக்குச்சொத்திற்கு எனது சகோதரர் ஆறுமுகம் பெயரில்தான் வருவாய் ஆவணங்கள் உள்ளன என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்து 50 வருடங்களுக்கு மேல் ஆகிறது. கடந்த 50 வருடங்களாக ஆறுமுகம்தான் வழக்குச்சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. தற்போது வழக்குச்சொத்தில் விலை ஏறிவிட்டதால் கூடுதலாக பணம் கேட்டு வாதியை கேட்டு வருகிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி